| | | | |
|---|---|---|---|
| Headline | Shahrifah is a lier | | |
| MediaTitle | Tamil Nesan | | |
| Date | 08 Feb 2013 | Language | Tamil |
| Circulation | 45,000 | Readership | 124,000 |
| Section | News | Color | Full Color |
| Page No | 4 | ArticleSize | 159 cm² |
| AdValue | RM 732 | PR Value | RM 2,197 |
| | | | |



# ஷரிபா ஒரு பொய்யர்

## பவானி போலீசில் புகார்



**பெட்டாலிங் ஜெயா, பிப். 8-** கடந்த டிசம்பரில் வடமலேசியா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் தன்னை நோக்கி நாகரிமற்ற முறையில் நடுவிரலால் சைகை காட்டியதாக சுவாரா வனிதா ஒரே மலேசியா தலைவர் ஷரிபா சோரா ஜபீனா வெளியிட்ட அறிக்கைக்கு எதிராக அப்பல்கலைக் கழக சட்டத்துறை மாணவி பவானி போலீசில் புகார் செய்துள்ளார்.

அப்பல்கலைக்கழகத்தில் கடந்த டிசம்பர் 4ஆம் தேதி நடைபெற்ற கருத்தரங்கிலிருந்து வெளியேறிய போது அத்தகைய சைகையைக் காட்டியதாக தன் மீது குற்றஞ் சாட்டியதால் அவருக்கு எதிராக நேற்று முன்தினம் காஜாங் மாவட்ட போலீஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளதாக பவானி தெரிவித்தார்.

ஷரிபா ஒரு பொய்யர், நான் அப்படியொரு காரியத்தை செய்யவில்லை என்றும், என் மீது அபாண்டமான பொய் சுமத்தி தன் பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியுள்ளதால், இப்புகாரை செய்ததாக பிரிமலேசியா இணைய தள பதிவேட்டிடம் தெரிவித்தார்.

தான் அவ்வாறு செய்ததற்கான ஒளிநாடா பதிவை பிரிமலேசியா டுடேயிடம் வழங்கியுள்ளதாக ஷரிபா கூறியுள்ளார். நானும் அதைப் பார்க்க விரும்புகிறேன் என தெரிவித்த பவானி, போலீசார் இவ்விவகாரமாக தீவிர விசாரணை மேற்கொண்டு உண்மை நிலையை வெளிச்சத்திற்குக் கொண்டு வர வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

கருத்தரங்கில் நடைபெற்ற சம்பவம் கடந்த பிப். 1இல் யூ டியூப்பில் பல்கலைக்கழக மாணவர் குரல் பகுதி 4 எனும் தலைப்பில் வெளியானபோது பல தரப்பினரின் கண்டனங்களுக்கு ஆளான ஷரிபா முதன்முறையாக இப்பொழுது இக்குற்றச்சாட்டை விடுத்துள்ளார் என்றார் பவானி.

பல எதிர்ப்புகளுக்கு ஆளான ஷரிபா, பவானியை மன்னிப்பதாகவும் பல்கலைக் கழக மாணவர்களுக்கு எதிராகவோ அவர்களின் பேச்சுரிமைக்கு தடையாகவோ இருந்ததில்லை என்றும் தெரிவிந்திருந்தார், ஆனால் பவானியிடம் மன்னிப்புக் கோர மறுத்ததோடு பல்கலைக் கழக நிர்வாகத்திடம் நடந்த சம்பவத்திற்காக மன்னிப்புக் கோரியிருந்தார்.

பவானி தொடுத்த போலீஸ் புகாரைத் தொடர்ந்து ஷரிபா தான் எந்தவொரு குற்றச்சாட்டையும் பிரி மலேசியா டுடேயுடன் நடந்த நேர்காணலின்போது தெரிவிக்கவில்லை என கூறியுள்ளார். பிரி மலேசியா டுடே இணையதள பதிவேடு வெளியிட்டுள்ள அறிக்கையில் எந்தவொரு குற்றச்சாட்டும் இருப்பதாக தெரியவில்லை என்றும் ஷரிபா கூறியுள்ளார்.

Powered by: MediaBanc Be informed